ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# ‖ ப்ரபந்ந காயத்ரி ‖

மதுரகவி தாசன்

1. மாறன் அடி பணிந்துய்ந்தவன் இராமாநுசன்
2. பல்கலையோர் தாம் மன்ன வந்தவன் இராமாநுசன்
3. குறையல் பிரான் அடிக்கீழ் விள்ளாத அன்பன் இராமாநுசன்
4. பொருவரும் சீர் ஆரியன் செம்மை இராமாநுசன்
5. ஊழி முதல்வனையே பன்னப் பணித்த பரன் இராமாநுசன்
6. எனக்குற்ற செல்வம் இராமாநுசன்
7. ஈன்கவிகள் அன்பால் மயல் கொண்டு வாழ்த்தும் இராமாநுசன்
8. பெருங்கீர்த்தி இராமாநுசன்
9. பழியைக் கடத்தும் இராமாநுசன்
10. (பொய்கைப்பிரான் எரித்த) திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே இருத்தும் பரமன் இராமாநுசன்
11. எம் இறையவன் இராமாநுசன்
12. பூதத் திருவடி தாள்கள் நெஞ்சத்துறைய வைத்தாளும் இராமாநுசன்
13. தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இராமாநுசன்
14. பாண் பெருமாள் சரணாம் பதுமத்தாரியல் சென்னி இராமாநுசன்
15. மழிசைக்கிறைவன் இணையடிப் போதடங்கும் இதயத்து இராமாநுசன்
16. பரன் தாளன்றி ஆதரியா மெய்யன் இராமாநுசன்
17. (கொல்லி காவலன் கவி பாடும்) பெரியவர் பாதங்களே துதிக்கும் பரமன் இராமாநுசன்
18. பான்மையன் தாள் பேராத உள்ளத்து இராமாநுசன்
19. சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன்
20. நீலன் தனக்கு உலகில் இனியான் எங்கள் இராமாநுசன்
21. பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம் உய்தற்கு உதவும் இராமாநுசன்
22. எம் உறுதுணை இராமாநுசன்
23. நீணிலத்தோர் அறிதர நின்ற இராமாநுசன்
24. எனக்காரமுது இராமாநுசன்
25. நாதமுனியை நெஞ்சால் வாரிப் பருகும் இராமாநுசன்
26. எந்தன் மாநிதி இராமாநுசன்
27. யமுனைத்துறைவன் இணையடியாம் கதி பெற்றுடைய இராமாநுசன்
28. என்னைக் காத்தனன் இராமாநுசன்
29. தீர்த்தனை ஏத்தும் இராமாநுசன்
30. எந்தன் சேமவைப்பு இராமாநுசன்
31. நல்லன்பர் மனத்தகத்தே எப்போதும் வைக்கும் இராமாநுசன்
32. மெய்ஞ்ஞானத்து இராமாநுசன்
33. காரேய் கருணை இராமாநுசன்
34. திக்குற்ற கீர்த்தி இராமாநுசன்
35. வஞ்சர்க்கரிய இராமாநுசன்
36. வேதப் பசுந்தமிழ் தன்னைத் தன் பத்தி என்னும் வீட்டின்கண் வைத்த இராமாநுசன்
37. அன்பன் அனகன் இராமாநுசன்
38. என்னை ஆண்டனன் இராமாநுசன்
39. தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்ட அன்பாளன் இராமாநுசன்
40. ஞாலத்தை வண்மையினால் வந்தெடுத்தளித்த அருந்தவன் இராமாநுசன்
41. பொன்னரங்கம் என்னில் மயலே பெருகும் இராமாநுசன்
42. நயப்புகழ் இராமாநுசன்

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

43. இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம் குடிகொண்ட கோயில் இராமாநுசன்
44. புண்ணியர் தம் வாக்கில் பிரியா இராமாநுசன்
45. தெருளும் தெருள் தரும் இராமாநுசன்
46. சேமங்கள் செய்யும் இராமாநுசன்
47. வாமனன் சீலன் இராமாநுசன்
48. அண்ணல் இராமாநுசன்
49. தூயவன் தீதில் இராமாநுசன்
50. யாவும் தெரிந்தவன் இராமாநுசன்
51. எண்ணரும் சீர் இராமாநுசன்
52. நல்லார் பரவும் இராமாநுசன்
53. மாறன் பணித்த மறை உணர்ந்தோன் இராமாநுசன்
54. திசை அனைத்தும் ஏறும் குணன் இராமாநுசன்
55. அறம் செப்பும் இராமாநுசன்
56. சிந்தை உள்ளே நிறைந்து ஒப்பறவிருந்த இராமாநுசன்
57. புன்மையிலோர் பகரும் பெருமை இராமாநுசன்
58. தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத் தானதில் மன்னும் இராமாநுசன்
59. எதித்தலை நாதன் இராமாநுசன்
60. அடியர்க்கமுதம் இராமாநுசன்
61. அற்புதன் இராமாநுசன்
62. என்னை ஆள வந்த கற்பகம் இராமாநுசன்
63. கற்றவர் காமுறு சீலன் இராமாநுசன்
64. ஈட்டிய சீலத்து இராமாநுசன்
65. தொண்டர் குலாவும் இராமாநுசன்
66. புனிதன் இராமாநுசன்
67. புவனம் எங்கும் ஆக்கிய கீர்த்தி இராமாநுசன்
68. உத்தமன் இராமாநுசன்
69. நற்றவர் போற்றும் இராமாநுசன்
70. மெய்ம்மதிக் கடல் இராமாநுசன்
71. குணம் திகழ் கொண்டல் இராமாநுசன்
72. எம் குலக்கொழுந்து இராமாநுசன்
73. அருமுனிவர் தொழும் தவத்தோன் இராமாநுசன்
74. மிக்க பண்டிதன் இராமாநுசன்
75. வல்வினையேன் மனத்தில் ஈனம் கடிந்த இராமாநுசன்
76. கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்ன இராமாநுசன்
77. எந்தை இராமாநுசன்
78. எண்ணில் பல்குணத்த இராமாநுசன்
79. பெருங்கருணை இராமாநுசன்
80. பெருந்தகை இராமாநுசன்
81. மதி புரையும் தண்மை இராமாநுசன்
82. உண்மை நல் ஞானம் உரைத்த இராமாநுசன்
83. கொண்டல் அனைய வண்மை இராமாநுசன்
84. ஏரார் குணத்து இராமாநுசன்
85. மெய்யைப் புரக்கும் இராமாநுசன்
86. நல்லார் பரவும் இராமாநுசன்
87. அரங்கன் செய்ய தாளிணைகள் பேர்வின்றி பெறுத்தும் இராமாநுசன்
88. தெரிவுற்ற கீர்த்தி இராமாநுசன்
89. சீர் முகில் இராமாநுசன்
90. கார் கொண்ட வண்மை இராமாநுசன்
91. பேதைமை தீர்த்த இராமாநுசன்

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

92. கற்றார் பரவும் இராமாநுசன்
93. வண்கீர்த்தி இராமாநுசன்
94. வலி மிக்க சீயம் இராமாநுசன்
95. போற்றரும் சீலத்து இராமாநுசன்
96. எனையாள வந்த இராமாநுசன்
97. மிக்க புண்ணியன் இராமாநுசன்
98. எண்ணரும் கீர்த்தி இராமாநுசன்
99. மெய்த்தவன் இராமாநுசன்
100. பொற் கற்பகம் இராமாநுசன்
101. துயர் அகற்றி உயக்கொண்டு நல்கும் இராமாநுசன்
102. எம் ஐயன் இராமாநுசன்
103. கீர்த்திப் பயிர் எழுந்து விளைந்திடும் சிந்தை இராமாநுசன்
104. செழுங்கொண்டல் இராமாநுசன்
105. நன்ஞானி இராமாநுசன்
106. நல் வேதியர்கள் தொழும் திருப்பாதன் இராமாநுசன்
107. இன்புற்ற சீலத்து இராமாநுசன்
108. பொங்கிய கீர்த்தி இராமாநுசன்

**எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்**